# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | : DW-1 | Date | : 19.12.2024 |
| Case No. | : O.S. 56/2019 | Nationality | : Indian |
| Name | : கவாஸ்கர் | Religion | : |
| Father's/Husband's Name | : சுவாமிநாதன் | Age | : 46 |
| Village | : | | |
| Taluk | : | | |

பி.சா.1

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் அரசு பள்ளியில் ஆசிரியராக பணி செய்து வருகிறேன். இவ்வழக்கில் நான் எனது தந்தைக்காக சாட்சியம் அளிக்கிறேனா அல்லது எனது தந்தையின் வழக்கில் சாட்சியம் அளிக்கிறேனா என்றால் தந்தைக்காக சாட்சியம் அளிக்கிறேன். இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க எனது தந்தையிடம் இருந்து பொது அதிகார ஆவணம் எதுவும் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. இவ்வழக்கில் நான் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். வழக்கில் தரப்பினராக இல்லாத ஒரு நபர் தரப்பினராக இருக்கும் நபரிடம் அதிகார ஆவணம் பெற்றால்தான் அவருக்காக சாட்சியம் அளிக்க இயலும் என்றால் சரியல்ல. எனது தந்தை நோய் வாய்ப்பட்டு படுத்த படுக்கையாய் இருப்பதாக எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கான மருத்துவ ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என்னிடம் உள்ளது தாக்கல் செய்யவில்லை. வழக்கு சம்மந்தமான விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதி தாக்கல் செய்துள்ள இவ்வழக்கில் யார் யார் தரப்பினர்கள், என்ன பரிகாரம்

கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும்.

2. எனது தந்தைக்கு எதிராக வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் வாதியின் இடம் எங்களிடம் உள்ளதாக கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளார். எனக்கு தற்போது வயது 46 என்றால் சரிதான். வாதியை எனக்கு எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் 25 வருடங்களாக தெரியும். வாதி குடியிருக்கும் வீட்டிற்கு தெற்கு பக்கத்தில் நெடுஞ்சாலைக்கு துறைக்கு சொந்தமான இடத்தில் ஒரு பிள்ளையார்கோவில் உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிலிருந்து அந்த பிள்ளையார்கோவிலுக்கு சுமார் 30 அல்லது 40 அடி தூரம் இருக்கும் என்றால் சரிதான். அந்த விநாயகர் கோவிலின் பெயர் அரசரடி விநாயகர் கோவிலாகும். அந்த கோவிலுக்கு முன்பு என்ன பெயர் இருந்தது என்றால் அரசரடி விநாயகர் கோவில் என்றுதான் பெயர் உள்ளது.

3. செ. புதூர் கிராமத்தில் அரசரடி விநாயகர் கோவிலை தவிர்த்து வேறு விநாயகர் கோவில் உள்ளதா என்றால் உள்ளது. அந்த கோவிலின் பெயர் தெரியுமா என்றால் 3 தெருக்கள் தள்ளி வரசித்தி விநாயகர் என்ற கோவில் உள்ளது. எனக்கு தெரிந்தபடி செ.புதூர் கிராமத்தில் அரசரடி விநாயகர் கோவில் மற்றும் வரசித்தி விநாயகர் கோவில் என்று 2 கோவில்கள் உள்ளது என்றால் சரிதான். மேற்படி 2 கோவில்களும் அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது என்றால் சரியல்ல. 2 கோவில்களும் பொதுக் கோவில்களாக இருந்தது. சுமார் 2 மாதத்திற்கு முன்புதான் அரசரடி விநாயகர் கோவில் அறநிலையத்துறையினர் கட்டுப்பாட்டின் கீழ் சென்றது. வரசித்தி விநாயகர் கோவில் தற்போதும் கிராம பொது கோவிலாகதான் உள்ளது. அரசரடி விநாயகர் கோவில் அறநிலையத்துறையினர் கட்டுப்பாட்டில் சென்றதாக யூகத்தின் அடிப்படையில் சொல்கிறேனா அல்லது ஆவணங்களின் அடிப்படையில் சொல்கிறேனா என்றால் நான் ஆவணங்களை நேரில் பார்க்கவில்லை ஆனால் கோவிலுக்கு அறங்காவலர்

நியமிக்கப்பட்டு அவர் பொறுப்பேற்று கொண்டுள்ளார். அந்த அறங்காவலரின் பெயர் முகவரி தெரியுமா என்றால் அவர் பெயர் பாபுஜி ஆகும். அந்த பாபுஜி என்பவர் எங்கள் வீட்டிற்கும் வாதி வீட்டிற்கும் எதிரில் வசிப்பவர் என்றால் சரிதான்.

4. அரசரடி விநாயகர் கோவில் அறநிலையத்துறையினர் கட்டுப்பாட்டின் கீழ் இல்லை என்றும் அது கிராம கோவிலாக உள்ளது என்றும் அறநிலையத்துறையால் சான்று வழங்கப்பட்டுள்ளது என்றாலும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. 2 மாதங்களுக்கு முன்பு வரை பொதுக் கோவிலாகதான் இருந்தது அதன் பிறகு தான் அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டிற்கு வந்துள்ளது. அரசரடி விநாயகர் கோவில் நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான சாலையில் அமைந்து அதனால் விபத்து ஏற்படுவதால் அதனை மகற்ற வேண்டும் என்று உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து கோவிலை அகற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டு 21.02.2025 ம் தேதிக்குள் அந்த கோவிலை அகற்றி கொடுப்பதாக கிராமத்தார்களால் உத்தரவாதம் கொடுக்கப்பட்டுள்ளது என்றாலும் அந்த வழக்கு விவரம் பற்றி எனக்கு தெரியவில்லை. மேற்படி கோவிலை வேறு இடத்தில் கட்டுவதற்கு 13.12.2024 ம் தேதி அறநிலையத்துறை செயற்பொறியாளரால் பிளான் அப்ருவல் வழங்கப்பட்டு அந்த உத்தரவு கோவிலில் ஒட்டப்பட்டுள்ளது என்றால் கோவில் கட்டுவதற்கு மாற்று இடம் தேடி வருகிறார்கள்.

5. நான் சொல்வதுபோல மேற்படி கோவிலுக்கு அறநிலையத்துறையால் அறங்காவலர் நியமிக்கப்படவில்லை என்றாலும் நான் யூகத்தின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. உப்பிலியப்பன் கோவிலில் இருந்து அதிகாரிகள் வந்து அறங்காவலரை நியமனம் செய்துவிட்டு சென்றார்கள். உப்பிலியப்பன் கோவில் நிர்வாகத்தின் கீழ் அரசரடி விநாயகர் கோவில் கிடையாது என்றால் சரியல்ல. 2 மாதங்களுக்கு முன்பாக கோவிலை அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் சேர்த்துள்ளதால்

அந்த கோவிலுக்கு சொத்துக்கள் இருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. சொத்துக்கள் உள்ளது. அரசரடி விநாயகர் கோவிலுக்கு யார் யாரால் சொத்துக்கள் கொடுக்கப்பட்டது என்பது குறித்து எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. அதற்கான அரசு ஆவணங்களும் தகவல்களும் உள்ளது.

6. மேற்படி ஆவணங்களை என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடிந்த அளவு என்னால் தாக்கல் செய்ய முடியும். நிருபண வாக்குமூலம் யாரால் விவரம் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டது என்றால் எனது தந்தையார் விவரம் கூறப்பட்டு தயார் செய்யப்பட்டது. நான் விவரம் கூறவில்லை என்றால் சரிதான். அதனால் நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, தெரியும். நிருபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். நான் அதனை படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். எனது நிருபண வாக்குமூலத்தில் 4 வது பக்கம் 11 வது பாராவில் சுமார் 250 ஆண்டுகளுக்கு மேலாக அரசடி விநாயகர் கோவில் கிராம மக்களுக்கு சொந்தமான பொதுக்கோவிலாகும் என்றும் இந்து சமய அறநிலையத்துறை ஆளுகையின் கீழ் வரவில்லை என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்தபோது அரசடி கோவில் அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் வரவில்லை என்பதால் அவ்வாறு சொல்லியுள்ளேன்.

7. நிருபண வாக்குமூலம் என்னால் 26.11.2024 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அரசடி விநாயகர் கோவிலுக்கு 2 மாதங்களுக்கு முன்பு அறங்காவலர் நியமனம் செய்யப்பட்டதாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் 2 மாத காலமாக அறங்காவலர் நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்தது. 15 நாட்களுக்கு முன்புதான் அறங்காவலர் நியமனம் செய்யப்பட்டார். அந்த கோவிலுக்கு எத்தனை

அறங்காவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள் என்றால் எனக்கு தெரிந்து ஒரு அறங்காவலர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். அவ்வாறு அறங்காவலர் நியமிக்கப்பட்டால் அறநிலையத்துறையால் நாளிதழ்களில் பொது அறிவிப்பு கொடுக்கப்படும் என்றால் அவ்வாறு பொது அறிவிப்பு எதுவும் கொடுக்கப்படவில்லை.

8. அறங்காவலராக நியமிக்கப்பட்ட விவரம் பாபுஜிக்கு தெரியுமா என்றால் நிச்சயமாக தெரியும். மேற்படி பாபுஜியின் தகப்பனார் பெயர் முகவரி சொல்ல முடியுமா என்றால் தகப்பனார் பெயர் எனக்கு தெரியவில்லை. எஸ்.புதூர் மெயின்ரோட்டில் வசித்து வருகிறார். எனக்கு சொந்தமான வீட்டிற்கு மேற்கு பக்கம் வாதி வீடு உள்ளது என்றால் சரிதான். எங்களுக்கு அந்த இடத்தில் 1 வீடு உள்ளதா 2 வீடு உள்ளதா என்றால் 1 வீடு கடையுடன் சேர்ந்து உள்ளது. வாதி வசிக்கும் வீட்டிற்கு வடபுறம் எங்களுக்கு சொந்தமான இடம் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தினை நீதிமன்ற ஆணையர் நில அளவையர் உதவியுடன் அளவிட வந்தது குறித்தும் அங்கு நடந்த பிரச்சனைகள் குறித்தும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

9. எங்கள் வீட்டிற்கும் வாதியின் வீட்டிற்கும் இடையில் வாதிக்கு சொந்தமான குளியல் அறை மற்றும் கழிவறை உள்ளது என்றால் அது வாதிக்கு சொந்தமான இடம் இல்லை. அது யாருக்கு சொந்தமான இடம் என்றால் எங்களுக்கு சொந்தமான இடத்தை வாதி ஆக்கிரமித்து குளியல் அறை மற்றும் கழிவறை கட்டியுள்ளார். அவ்வாறு குளியல் அறை மற்றும் கழிவறை வாதி கட்டியபோது நாங்கள் ஆட்சேபனை எதுவும் செய்தோமா என்றால் வாதி வீட்டில் சிறு குழந்தைகள் இருந்ததால் எங்கள் வீட்டின் சுவற்றை ஒட்டி கட்டி கொள்ளுமாறு நாங்கள் அனுமதி அளித்தோம். அவர் எங்கள் இடத்தை ஆக்கிரமித்து கட்டிவிட்டார். நான் வாதியின் தந்தையை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. வாதியின் உடன் பிறந்த சகோதரரை பார்த்துள்ளேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை. வாதிக்கு

குளியல் அறை கட்டிக்கொள்ள யார் அனுமதி கொடுத்தது என்றால் எனது தந்தை அனுமதி கொடுத்தார் அது எனக்கும் தெரியும்.

10. அதனால் குளியல் அறை மற்றும் கழிவறை அனுமதியுடன் கட்டப்பட்டது என்றாலும் ஆக்கிரமித்து கட்டப்படவில்லை என்றாலும் சரியல்ல. நாங்கள் ஆவணம் எதுவும் எழுதி கொடுக்கவில்லை. தற்காலிகமாக வாய்மொழியாகதான் அனுமதித்தோம். வாதி வீட்டிற்கு வடபுறம் அவரது வேலி அடைப்பு இருந்தது என்றால் 20 வருடங்களுக்கு முன்பாக இருந்தது தற்போது இல்லை. வாதி வீட்டினை ஒட்டி உள்ள எங்கள் இடத்தில் வேப்ப மரம், முருங்கை மரம், மாமரம் இருந்தது என்றால் வேப்ப மரம் மட்டும்தான் உள்ளது. வேப்ப மரத்திலிருந்து இலை மற்றும் கிளைகள் வாதி வீட்டில் விழுந்து அதனை சுத்தம் செய்யும்போது கேட்டபோதுதான் வாதிக்கும் எங்களுக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. அதனால் பிரச்சனை ஏதும் ஏற்படவில்லை. அந்த வேப்ப மரம் யாருக்கு சொந்தமானது என்றால் எங்களுக்கு சொந்தமான மரமாகும்.

11. வாதி குளியல் அறை மற்றும் கழிவறை கட்டியுள்ள இடத்தை நாங்கள் கேட்டபோதுதான் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. மேலும் கூடுதலாக எங்கள் இடத்தை கேட்டுதான் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி குளியல் அறை மற்றும் கழிவறை அருகில் காம்பவுண்டு சுவர் உள்ளது என்றால் எங்களுக்கு சொந்தமான காம்பவுண்டு சுவர் உள்ளது. எங்களுக்கு சொந்தமான காம்பவுண்டு சுவற்றை தாண்டி வாதி வருவதற்கு வாய்ப்பில்லை என்றால் சரிதான். நாங்கள் குளியல் அறை மற்றும் கழிவறையை அகற்றி இடத்தை எங்களிடம் ஒப்படைக்க கோரி சுவாதீன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. நான் சொல்வது போல எங்களுக்கு சொந்தமான பட்டா இடத்தில் வாதியின் குளியல் அறை மற்றும் கழிவறை இல்லை என்றாலும் அவருக்கு சொந்தமான இடத்தில்தான் உள்ளது என்றாலும் சரியல்ல. வாதி

குடியிருக்கும் தொகுப்பு வீட்டிற்கும் எங்களுக்கு சொந்தமான காம்பவுண்டு சுவருக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 10 அடி தூரம் இருக்கும்.

12. வாதி வீட்டிற்கும் காம்பவுண்டு சுவற்றுக்கும் இடையில்தான் குளியல் அறை மற்றும் கழிவறை உள்ளது என்றால் சரிதான். வாதி என்ன வீடு கட்டியுள்ளார் என்றால் தற்சமயம் தொகுப்பு வீட்டில் வசித்து வருகிறார். தொகுப்பு வீட்டிற்கு வாரி அமைக்க முடியாது என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. வாதி வீட்டில் விழக்கூடிய மழை நீர் 10 அடி தூரத்தில் உள்ள எங்கள் வீட்டிற்குள் வர வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. கொல்லைபுறமாக எங்கள் வீட்டிற்குள் வருகிறது. எங்களுக்கு சொந்தமான பட்டா சொத்தினை ஒரு முறையாவது கட்டணம் செலுத்தி நில அளவீடு செய்துள்ளோமா என்றால் இல்லை. வாதி எங்கள் இடத்தை ஆக்கிரமித்துள்ளதாக சொல்லும் நிலையில் ஏன் நாங்கள் நில அளவீடு செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் நாங்கள் வழக்கு தாக்கல் செய்ய ஏற்பாடு செய்து கொண்டிருந்தோம். எங்களுக்கு முன்பாக வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துவிட்டார்.

13. இவ்வழக்கில் எனது தந்தை எதிர்பாத்திய கோரிக்கை எதுவும் தாக்கல் செய்துள்ளாரா என்றால் இல்லை. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் நீதிமன்ற ஆணையரிடம் அளிக்கப்பட்ட ஆட்சேபனை குறிப்பாணையில் உள்ள கையொப்பம் எனது தந்தையின் கையொப்பம் என்றால் சரிதான். பிசாஆ 1 ஆவணம் புல எண் 216/2 ல் கண்ட சொத்திற்கான ஆவணம் என்றால் சரிதான். அதில் நான்கெல்லைகள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அந்த சொத்திற்கும் வழக்கு சொத்திற்கும் சம்மந்தம் இல்லை. பிசாஆ 2 ஆவணம் புல எண் 216/4 ல் கண்ட சொத்திற்கான ஆவணம் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் 1958 ஆம் ஆண்டில் வேம்பு ரத்தினம் மற்றும் சேதுராம சர்மா ஆகியோர் எனது தாத்தாவிற்கு எழுதி கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். புல

எண் 216/4 என்பது நாங்கள் தற்போது குடியிருக்கும் வீடு என்றால் சரிதான். பிசாஆ 2 ஆவணத்தில் கிழக்கு மற்றும் மேற்கு நான்கெல்லையில் யாருக்கு சொந்தமான சொத்து உள்ளது என்று காண்பிக்கப்பட்டுள்ளது வேம்பு ரத்தினம் மற்றும் சேதுராம அய்யருக்கு சொந்தமான இடம் என்று காண்பிக்கப்பட்டுள்ளது. பிசாஆ 3 ஆவணம் 28.03.1980 ம் தேதி எனது தாத்தாவால் எனது அப்பாவிற்கு எழுதி வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிசாஆ 3 ஆவணத்தில் புல எண் .216/4 என சொத்து காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிசாஆ 3 ஆவணத்தில் மேற்கு மற்றும் கிழக்கு நான்கெல்லையில் எனது தாத்தாவிற்கு சொந்தமான சொத்து இருப்பதாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

14. பிசாஆ 2 ஆவணத்தின் படி எங்களுக்க சொந்தமான சொத்திற்கு கிழக்கு மற்றும் மேற்கு புறத்தில் உள்ள சொத்து வேம்பு ரத்தினம் மற்றும் சேதுரா சர்மா ஆகியோருக்கு சொந்தமானதாக இருந்திருக்க முடியும் என்றால் சரிதான். அவர்கள்தான் கோவிலுக்கு சொத்து எழுதி கொடுத்துள்ளார்கள். அவர்கள் கோவிலுக்கு சொத்தை எழுதி கொடுத்ததாக சொல்வதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்ய முடியுமா என்றால் சிட்டா அடங்கலில் அவ்வாறு உள்ளது. தேடி பார்த்துதான் தாக்கல் செய்ய முடியும். வாதி குடியிருக்க கூடிய அதே சாலையில் 5 வீடுகள் உள்ளது என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் வாதி குடியிருக்கும் இடம் வேம்பு ரத்தினம் மற்றும் சேதுராம சர்மா ஆகியேரால் அரசடி விநாயகர் கோவிலுக்கு எழுதி கொடுக்கப்பட்ட இடம் இல்லை என்றாலும் அவ்வாறு ஆவணம் எதுவும் இல்லை என்றாலும் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் நில அளவையர் உதவியுடன் தாவா சொத்தினை அளவீடு செய்தபோது எனது தந்தை அளவீடு செய்யக்கூடாது என ஆட்சேபனை செய்தார் என்றால் சரிதான். தாய் கல் இல்லாமல் அளவீடு செய்யப்பட்டதால் எனது தந்தை ஆட்சேபனை செய்தார். அதன் பிறகு பழைய கிராம புல வரைபடம் மற்றும் புதிய கிராம வரைபடத்தின் அடிப்படையில் தாவா சொத்தினை அளவீடு செய்ய

நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு அளவீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். தாய் கல் இல்லாமல் அளவீடு செய்யப்பட்டுள்ளதால் அந்த அளவீடு சரியானதல்ல.

15. நீதிமன்ற ஆணையர் அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட பிறகு அதற்கு ஆட்சேபனை எதுவும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம். எங்கள் வீட்டிலிருந்து கிழக்கு பக்கம் 4 வீடு தள்ளி முருகன் வீடு உள்ளது என்றால் முருகன் வீடு சுமார் 10 வீடுகள் தள்ளி உள்ளது. முருகன் வீட்டு பிரச்சனை சம்மந்தமாக நீதிமன்ற ஆணையர் நில அளவீடு செய்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் நில அளவையர் அறிக்கை மிகவும் சரியாக உள்ளது என்றால் சரியல்ல. கிராமத்தினர் மற்றும் பாபுஜியின் தூண்டுதலின்பேரில் கோவில் சொத்து என்று சொல்லி வாதியின் சொத்தை நாங்கள் ஆக்கிரமிக்க முயற்சி செய்தோம் என்றால் சரியல்ல. அரசடி கோவில் புதிதாக கட்டுவதற்கு வாதியின் இடம் தேவைபடுவதால் அது கோவில் சொத்து என்று நாங்கள் பிரச்சனை செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. வாதி அவரது உரிமையை நிலைநாட்ட சட்ட உரிமையுடன் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வாதி கோரிய பரிகாரங்கள் அவருக்கு கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2024.12.20 09:51:54 +0530

District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.